**முதலாம் கூடுதல் மாவட்ட நீதிமன்றம் , ஈரோடு**

**O.S.No.**225/2018

2026 ஆம் வருடம் மார்ச் மாதம் 17ம் தேதியன்று DW.1 ஆக விசாரிக்கப்படுபவர் 1969ம் ஆண்டு 54 வது சட்டத்திலுள்ள பிரிவு (7ன்படி) **திருமதி.S.எழில்,M.L.**, முதலாம் கூடுதல் மாவட்ட நீதிபதி, ஈரோடு அவர்களால் ஆணையிட்டு உறுதி கூறப்படுகிறது.

| | | | |
|---|---|---|---|
| பெயர் | : ஆறுமுகம் | --- | : |
| தந்தை /கணவர் பெயர் | : | தொழில் | : |
| கிராமம் | : | வயது | : |
| தாலூக்கா | : | மாவட்டம் | : |

**சாட்சிக்கு சத்தியப்பிரமாணம் செய்யப்பட்டு**

**முதல் விசாரணை :**

நான் வழக்கில் 8ம் பிரதிவாதி. என் முதல் விசாரணை ஆணையுறுதி பத்திரத்தை தாக்கல் செய்கிறேன். என் முதல் விசாரணை ஆணையுறுதி பத்திரத்தை படித்துப் பார்த்துதான் நான் அதில் உள்ள விவரங்களை ஒப்புக்கொண்டு என் கையொப்பங்களை போட்டுள்ளேன்.என் தரப்பு சான்றாவணங்களாக 27.03.196ம் தேதிய என் தந்தை முத்துசாமி கவுண்டர் பெயரில் உள்ள கிரய பத்திரத்தின் அசல் **பி.வா.சா.ஆ 1,** 24.06.1962ல் என் தந்தை முத்துசாமி கவுண்டர் பெயரில் உள்ள கிரய பத்திரத்தின் சான்றிட்ட நகல் **பி.வா.சா.ஆ.2,** 11.05.1977ம் தேதியில் என் தந்தை முத்துசாமி கவுண்டர் பெயரில் உள்ள கிரய பத்திரத்தின் சான்றிட்ட நகல் **பி.வா.சா.ஆ.3,** 18.05.1984ம் தேதியில் என் தந்தை முத்துசாமி கவுண்டர் பெயரில் உள்ள கிரய பத்திரத்தின் அசல் **பி.வா.சா.ஆ.4**, 13.12.2015ம் தேதியில் 4 ம் பிரதிவாதி மற்றும் 7ம் பிரதிவாதி மற்றும் என் பெயரில் தாக்கல் செய்த அ.வ.எண்.452/2015ல் நாங்கள் லோக் அதாலத்தில் செய்து கொண்டு செட்டில்மெண்ட் **பி.வா.சா.ஆ.5**, அதன் பேரில் ஏற்பட்ட சமரச தீர்ப்பாணையின் சான்றிட்ட நகல் **பி.வா.சா.ஆ.6** ஆக தாக்கல் செய்கிறேன்.